Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.11**

| | | | |
|---|---|---|---|
| Name: | அரவிந்த் | Calling: | MCA மாணவர் |
| Father's / Husband's Name: | தனபால் | Religion: | |
| Village: | காட்பாடி | Age: | 22 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 11 முதன்மை விசாரணை

நான் காட்பாடியில் வசித்து கொங்கு கல்லூரியில் MCA பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படித்து வருகிறேன். கடந்த 2023ம் வருடம் VITயில் B.Sc.(Computer Science) படித்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி நினைவில்லை. பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் 2023ம் வருடத்தில் நான், சந்தோஷ், கௌதம், இளவரசன், ராகுல் ஆகியோர் காரில் ஏலகிரி செல்வதற்காக ஓட்டுநர் ஒருவர் ஓட்ட (ஓட்டுநர் பெயர் நினைவில்லை.) சென்று கொண்டிருந்தபோது காலை நேரத்தில் வேலூரில் கிளம்பினோம். பள்ளிக்கொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். அதன்பிறகு கார் கவிழ்ந்த பிறகு விழிப்பு வந்தது. அந்த இடம் வாணியம்பாடி என்று சொன்னார்கள். வெளியே 3 பள்ளி மாணவர்கள் அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு போலிசார் எங்களை அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 28.02.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு Miyles KA 03 AF 0194 என்ற காரை நண்பர்களுடன் ஆஜர் எதிரி ஓட்ட சென்னை டூ பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தோமா என்றால் இல்லை. சுமார் 08.45 மணியளவில் கிரிசமுத்திரம் கூட்ரோட்டை தாண்டி எங்கள் வாகனத்திற்கு முன்பு ஒரு இருசக்கர வாகனம் சென்றதால் ஆஜர் எதிரி நாங்கள் வந்த காரை வலது புற லைனில் செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. அங்கு லாரி இருந்ததால் வாகனத்தை இடது புறமாக திருப்பி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலையின் இடது புறத்தில் இருந்த தடுப்பு சுவரில் மோதி இரண்டு சைக்கிள்களில் பள்ளிக்கு சென்ற மூன்று சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 குழந்தைகளும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர் என்பது எனக்கு தெரியுமா என்றால் வெளியே வந்தபோது பார்த்தேன். போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தினால் தான் விபத்து ஏற்பட்டதாகவும், நான் அதை நேரில் பார்த்ததாகவும் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரி என் உடன் பயின்ற கல்லூரி மாணவர் என்பதால் அவரது வேண்டுகோளுக்கு இணங்க எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அரவிந்த்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.12**

| | | | |
|---|---|---|---|
| Name: | கௌதமன் | Calling: | வேலை தேடுபவர் |
| Father's / Husband's Name: | செல்வகுமார் | Religion: | |
| Village: | அணைக்கட்டு | Age: | 21 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 12 முதன்மை விசாரணை

நான் அணைக்கட்டில் வசித்து B.Sc.(Computer Science) படித்து முடித்துவிட்டு வேலை தேடி வருகிறேன். நான் 2023ம் வருடம் VITயில் B.Sc.(Computer Science) படித்து வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி நினைவில்லை. பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் 2023ம் வருடத்தில் நான், அரவிந்த், சந்தோஷ், இளவரசன், ராகுல் ஆகியோர் காரில் ஏலகிரி செல்வதற்காக ஓட்டுநர் ஒருவர் ஓட்ட (ஓட்டுநர் பெயர் நினைவில்லை.) சென்று கொண்டிருந்தபோது காலை நேரத்தில் வேலூரில் கிளம்பினோம். பள்ளிக்கொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். அதன்பிறகு திடீரென்று சத்தம் கேட்டது. நான் மயக்கமாகிவிட்டேன். பிறகு வாணியம்பாடி அருகே கார் கவிழ்ந்துவிட்டது என்று சொன்னார்கள். வெளியே 3 பள்ளி மாணவர்கள் அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு போலிசார் எங்களை அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 28.02.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு Miyles KA 03 AF 0194 என்ற காரை நண்பர்களுடன் ஆஜர் எதிரி ஓட்ட சென்னை டூ பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தோமா என்றால் இல்லை. சுமார் 08.45 மணியளவில் கிரிசமுத்திரம் கூட்ரோட்டை தாண்டி எங்கள் வாகனத்திற்கு முன்பு ஒரு இருசக்கர வாகனம் சென்றதால் ஆஜர் எதிரி நாங்கள் வந்த காரை வலது புற லைனில் செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. அங்கு லாரி இருந்ததால் வாகனத்தை இடது புறமாக திருப்பி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சாலையின் இடது புறத்தில் இருந்த தடுப்பு சுவரில் மோதி இரண்டு சைக்கிள்களில் பள்ளிக்கு சென்ற மூன்று சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 குழந்தைகளும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர் என்பது எனக்கு தெரியுமா என்றால் வெளியே வந்தபோது பார்த்தேன். போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தினால் தான் விபத்து ஏற்பட்டதாகவும், நான் அதை நேரில் பார்த்ததாகவும் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரி என் உடன் பயின்ற கல்லூரி மாணவர் என்பதால் அவரது வேண்டுகோளுக்கு இணங்க எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கௌதமன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.13**

| | | | |
|---|---|---|---|
| Name: | மேரி | Calling: | கூலி |
| Father's / Husband's Name: | ராஜி | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 34 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 13 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து ஷீ கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த சூரியா மற்றும் விஜய் எனது மகன்கள். கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு கிரிசமுத்திரத்திலுள்ள அரசு பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிளை விஜய் ஓட்ட சூரியா பின்னால் அமர்ந்து சென்றார். சாமி & கோ ஷீ கம்பெனி அருகே பிள்ளைகள் சென்றபோது ஆம்பூரிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ஊரில் உள்ள யாரோ ஒருவர் எனக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றபோது அந்த விபத்தில் காயம்பட்ட எனது மகன்கள் மற்றும் மற்றொரு சைக்கிளில் பள்ளிக்கு சென்ற எனது மாமா மகன் ரபீக் என்பவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் கூறினார்கள். பின் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது மகன்கள் மற்றும் ரபீக்கிற்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார்கள். போலிசார் மூவரின் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) மேரி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.14**

| | | | |
|---|---|---|---|
| Name: | சதீஸ் | Calling: | புரோகிதர் |
| Father's / Husband's Name: | முத்துக்குமார் | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 32 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 14 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து புரோகிதர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த சூரியா மற்றும் விஜய் எனது மனைவியின் மாமா மகன்கள். விபத்தில் இறந்த மற்றொரு நபரான ரபீக் அவர்களது பக்கத்து வீட்டுபையன். கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு கிரிசமுத்திரத்திலுள்ள அரசு பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிளை விஜய் ஓட்ட சூரியா பின்னால் அமர்ந்து சென்றார். சாமி & கோ ஷீ கம்பெனி அருகே பிள்ளைகள் சென்றபோது ஆம்பூரிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ஊரில் உள்ள யாரோ ஒருவர் எனக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றபோது அந்த விபத்தில் காயம்பட்ட விஜய், சூரியா மற்றும் ரபீக் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் கூறினார்கள். பின் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மூவரும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார்கள். போலிசார் மூவர் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தவிர வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சதீஸ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.15**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுஜிதா | Calling: | இல்லதரசி |
| Father's / Husband's Name: | சதீஸ் | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 24 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 15 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்த சூரியா மற்றும் விஜய் எனது மாமா மகன்கள். விபத்தில் இறந்த மற்றொரு நபரான ரபீக் அவர்களது பக்கத்து வீட்டுபையன். கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு கிரிசமுத்திரத்திலுள்ள அரசு பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிளை விஜய் ஓட்ட சூரியா பின்னால் அமர்ந்து சென்றார். சாமி & கோ ஷீ கம்பெனி அருகே பிள்ளைகள் சென்றபோது ஆம்பூரிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ஊரில் உள்ள யாரோ ஒருவர் எனக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்று பார்த்தேன். அந்த விபத்தில் காயம்பட்ட விஜய், சூரியா மற்றும் ரபீக் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார்கள். பிறகு அவர்களின் பிரேதத்தை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். போலிசார் மூவர் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தவிர வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சுஜிதா

SRIPATHI K Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.16**

| | | | |
|---|---|---|---|
| Name: | அமுதா | Calling: | கூலி |
| Father's / Husband's Name: | நடராஜன் | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 42 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 16 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த சூரியா மற்றும் விஜய் எனது தம்பி மகன்கள். விபத்தில் இறந்த மற்றொரு நபரான ரபீக் அவர்களது பக்கத்து வீட்டுபையன். கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.30 மணிக்கு கிரிசமுத்திரத்திலுள்ள அரசு பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிளை விஜய் ஓட்ட சூரியா பின்னால் அமர்ந்து சென்றார். சாமி & கோ ஷீ கம்பெனி அருகே 08.45 மணியளவில் ஓவர் ஸ்பீடில் வந்த கார் ஒன்று தடுப்பு சுவரை தாண்டி பிள்ளைகள் சென்ற சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றபோது அந்த விபத்தில் காயம்பட்ட விஜய், சூரியா மற்றும் ரபீக் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் கூறினார்கள். பின் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மூவரும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார்கள். போலிசார் மூவர் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தவிர வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அமுதா

SRIPATHI K Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.17**

| | | | |
|---|---|---|---|
| Name: | வினோத் | Calling: | டிரைவர் |
| Father's / Husband's Name: | முனுசாமி | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 36 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 17 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த சூரியா மற்றும் விஜய் எனது அக்கா மகன்கள். விபத்தில் இறந்த மற்றொரு நபரான ரபீக் தெரியும். கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.45 மணிக்கு கிரிசமுத்திரத்திலுள்ள அரசு பள்ளிக்கு செல்வதற்கு சைக்கிளை விஜய் ஓட்ட சூரியா பின்னால் அமர்ந்து சென்றார். சாமி & கோ ஷீ கம்பெனி அருகே 08.45 மணியளவில் ஓவர் ஸ்பீடில் வந்த கார் ஒன்று தடுப்பு சுவரை தாண்டி பிள்ளைகள் சென்ற சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றபோது அந்த விபத்தில் காயம்பட்ட விஜய், சூரியா மற்றும் ரபீக் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் கூறினார்கள். பின் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மூவரும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார்கள். போலிசார் மூவர் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தவிர வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) வினோத்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.18**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாஸ்கர் | Calling: | டிரைவர் |
| Father's / Husband's Name: | குப்புசாமி | Religion: | |
| Village: | வளையாம்பட்டு | Age: | 43 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 11.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 18 முதன்மை விசாரணை

நான் வளையாம்பட்டில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அதை நான் 28.02.2023ம் தேதி திருப்பத்தூரிலிருந்து ஆம்பூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சாமி & கோ ஷீ கம்பெனி அருகே கார் ஒன்று அதன் செல்லும் வழியில் இருந்து ரோடு மாறி வந்து சைக்கிளில் சென்ற மாணவர்கள் மோதி விபத்தானது. அந்த விபத்தில் மூன்று மாணவர்களும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். போலிசார் அங்கு வந்து பார்த்து விட்டு எழுதி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

போலிசார் என்னிடம் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு எழுதி குறிப்பெடுத்துக்கொண்டு அந்த தாளில் தான் கையொப்பம்வாங்கினார்கள்

என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்ட நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பாஸ்கர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K